Srilankamoors.com

# தப்ஸீர் கலை–02

அன்சார் (தப்லீகி)

தப்ஸீரின் வகைகள்

அல்குர்ஆனுக்கு செய்யப்பட்ட விரிவுரை கிரந்தங்களை பிரதானமாக இரண்டு வகைகளாக அறிஞர்கள் பிரிக்கின்றார்கள்

1. அல்தப்ஸீர் பில் ம∴ஸு ர்
11. அத்தப்ஸீர் பில் ர∴யி

அல்தப்ஸீர் பில் ம∴ஸு ர்

ஒரு திருக்குர்ஆன் வசனத்திற்கு வேறு வசனத்திற்கு வேறு வசனங்களைக் கொண்டோ நபிகளாரின் பொன் மொழிகளைக் கொண்டோ வியாக்கியானம் செய்வதற்கு அல்தப்ஸீர் பில் ம∴ஸு ர் எனக் கூறப்படும்.

இதனுடன் அல்குர்ஆன் எச்சமூகத்தின் முன்னிலையில் இறங்கப்பட்டதோ அந்த ஸஹாபாக்கள் திருக்குர்ஆனுக்கு கொடுக்கக்கூடிய விளக்கங்களும் அவர்களை அடுத்துவந்த தாபியீன், தபஉத் தாபியீன்களின் விளக்கங்களும் இதனுடைனேயே சேர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட இமாம்கள்

நபிகளாரின் பொன் மொழிகளைத் தொகுத்த ஹதீஸ்கலை அறிஞர்களின் ஒரு சாரார் இன்னொருபுறம் திருக்குர்ஆனுக்கு செய்யப்பட்ட விரிவுரைகளையும் தனித்தனி கிரந்தங்களாகத் தொகுத்தனர்.

இமாம் அப்துர் ரசாக், இமாம் இப்னு அபிஹாதிம் , இமாம் ஸயீத் இப்னு மன்ஸு ர், இமாம் இப்னு ஜரீர் அத்தபரீ போன்ற ஹதீஸ்கலை அறிஞர்களை இந்த வரிசையில் குறிப்பிடலாம். இவர்கள் 3ம் நூற்றாண்டுக்குட்பட்டவர்கள்.

இதே வேளை இதற்கான தனிக்கிரந்தங்களைத் தொகுக்காமல் ஹதீஸ் கிரந்தங்களில் உள்ளடக்கப்பட்ட பாடங்களில் இன்னும் சில ஹதீஸ்கலை அறிஞர்கள் திருக்குர்ஆன் விளக்கங்களை தொகுத்து எழுதியுள்ளார்கள்.

இவர்களில் முக்கியமானவர்களாக இமாம் புஹாரி, இமாம் முஸ்லிம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

பிற்பட்ட காலங்களில் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பல இமாம்களும் ஹதீஸ்கலையோடு கூடுதல் ஈடுபாடுகொண்ட பல அறிஞர்களும் அதில் ஈடுபாடு குறைந்தவர்களும் ஆங்காங்கே சிதறிக்கிடந்த தரவுகளை ஒன்று சேர்த்து பல தப்ஸீர் கிரந்தங்களை எழுதினார்கள்.

இவர்களில் பின்வருபவர்களைக் குறிப்பிடலாம்

1. இமாம் அபூஸயீத் அஸ்ஸமர்கன்தீ
11. இமாம் அப்பகவீ
111. இமாம் அபூஇஸ்ஹாக் அத்த∴லபீ
இமாம் இப்னு அதீய்யா அல் உந்தூலூஸீ போன்றவர்கள்

இவர்கள் 04, 05ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்

இவ்வாறு ஹிஜ்ரி 7ம் நூற்றாண்டில் இமாம் இப்னுகஸீர் (ரஹ்) அவர்களும் 8ம் நூற்றாண்டில் இமாம் அப்துர்ரஹ்மான் பிந்த∴லபீ, அஸ்ஸு யூத்தீ (ரஹ்) போன்றோர் தொகுத்த தப்ஸீர் கிரந்தங்களும் குறிப்பிடத்தக்கது.

ஹிஜ்ரி 6ம் நூற்றாண்டு காலப்பகுதியில் மிகப் பெரும் அறிவாளியாக இருந்த இமாம் இப்னு தைமிய்யா மற்றும் அவரின் மாணவன் இப்னுல் கையூம் அல் ஜவ்ஸீ (ரஹ்) போன்றோரின் திருக்குர்ஆன் விளக்கங்களும் ஒன்றுசேர்க்கப்பட்டன.

இந்தவகை தப்ஸீர்களின் சிறப்பம்சங்களும் குறைபாடுகளும்

சிறப்பம்சங்கள்

இத்தப்ஸீர்களிலே ஓர் திருக்குர்ஆன் வசனத்திற்கு விளக்கம் கொடும்கும்போது சொந்த வியாக்கியானங்களுக்கு முன்னுரிமை வழங்காமல் மற்றொரு திருக்குர்ஆன் வசனம் மூலம் அல்லது நபிகளாரின் பொன்மொழி மூலம் விளக்கம் கொடுப்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான வஹி மூலமான விளக்கங்கள் கிடைக்கப்பெறாத வசனங்களுக்கு விளக்கமளிக்கின்றபோது, ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்களின் கருத்துக்களை ஒன்று

திரட்டி அவைகளுக்கடையில் வேறுபாடுகள் இருந்தால் அவற்றில் ஒன்றை சரிகாண்பதும், வேறுபாடுகளில்லாமல் ஒருமித்த கருத்தாயின் அதையே அத்திருக்குர்ஆன் வசனத்தின் விளக்கமாக கூறுவதுமான தப்ஸீர்களில் காணலாம்.

குறைபாடுகள்

நபிகளாரின் பொன்மொழிகளைத் தொகுத்த ஹதீஸ்கலை அறிஞர்களில் ஓர் சிலர்தான் ஆதாரமானதை மாத்திரம் தனிக்கிரந்தமாக்குவோம் என்று ஸஹீஹான கிரந்தங்களை தொகுத்ததை நாம் அறிவோம்.

பெரும்பாலான கிரந்தங்களில் ஆதாரமான ஹதீஸ்களும் ஆதாரமற்ற ஹதீஸ்களும் தரம்பிரிக்கப்படாமலே எழுதப்பட்டிருப்பது எம்மில் ஒரு சாராருக்குத் தெரிந்த விடயம்.

இதே போன்றுதான் திருக்குர்ஆன் வசனத்திற்கு வியாக்கியானம் செய்கின்ற போது அதற்கு விளக்கமாக வருகின்ற நமிமொழிகளில் ஆதாரமானதையும் பலஹீனமானதையும் அதன் தரத்தை விபரிக்காமலே பெரும்பாலும் இந்தப்ஸீர்களை இமாம்கள் எழுதியுள்ளார்கள்.

இவ்வாறே ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள் கொடுத்த விளக்கங்களிலும் உண்மையிலே அவர்களைத் தொட்டும் வந்த நம்பகமான செய்திகளையும், அவர்களைத் தொட்டும் வந்த ஆதாரமற்ற பலஹீனமான செய்திகளையும் அவைகளைத் தரம்பிரிக்காமல் இக்கிரந்தங்களில் எழுதியுள்ளார்கள்.

இவை அனைத்துக்கும் அப்பால் தௌறாத், இன்ஜீல் வேதத்தைப் படித்ததன் பின்னர் அம்மதங்களிலிருந்து இஸ்லாத்திற்கு வந்த அக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் அவ்வேதங்களில் சொல்லப்பட்ட சில செய்திகளையும் திருக்குர்ஆனின் வியாக்கியானங்களில் எழுதியுள்ளார்கள்.

அல் இஸ்ராயிலிய்யாத்

முன்வந்த வேதங்களில் மூலம் திருக்குர்ஆன் வசனங்களுக்கு சொல்லப்பட்ட விளக்கங்களுக்கு அல்-இஸ்ராயிலிய்யாத் என்று சொல்லப்படும். இவைகளில் அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாஹ்விற்கு நேர்பாடான செய்திகளும் உள்ளன. அதற்கு முரணான இஸ்லாமிய நம்பிக்கையை சிதைவடிக்கக்கூடிய செய்திகளும் உள்ளன.

விளைவுகள்

இவ்விபரங்களை அறியாத ஹதீஸ்கலையில் பாண்டித்தியம் இல்லாத அறிஞர்கள், மௌலவிமார்கள் இந்தப்ஸீர்களில் சொல்லப்பட்ட, எழுதப்பட்ட அனைத்து செய்திகளையும் சரியானது என நம்பி அவைகளிலுள்ள ஆதாரமற்ற செய்திகளையும் ஆதாரமானதாகக் கருதி பொதுமக்களுக்கு தப்ஸீர் விளக்க உரை வழங்கும் போது எடுத்துச் சொல்லி விடுகின்றனர்.

அதனால் தங்கத்திற்கும், செம்பிற்கும், பித்தளைக்கும் வித்தியாசம் தெரியாத இந்த அறிஞர்களினால் முன்வைக்கப்பட்ட எல்லா விடயங்களையும் பாமரமக்கள் தங்கமாகவே கருதி அதை பாதுகாத்து வருகின்றனர்.

சீர் திருத்தம்

இந்த விபரீதங்களை உணர்ந்த ஹதீஸ்துறையில் பாண்டித்தியம் பெற்ற இப்னு கஸீர் (ரஹ்) போன்றோர் இந்த வகையிலான தப்ஸீரை எழுதிய போது பல இடங்களில் சொல்லப்படக்கூடிய செய்திகளைத் தரம் பிரித்து ஏற்கத்தவை எது ஏற்கத்தகாதவை எது என்பதை அவருடைய தப்ஸீரில் விபரித்துள்ளார்.

என்றாலும் பல இடங்களில் செய்திகள் தரம்பிரித்துக் கூறப்படாததால் அவருக்குப் பின்வந்த சில அறிஞர்கள் அதிலுள்ள ஆதாரமற்ற செய்திகளை போக்கிவிட்டு ஆதாரமானதை மட்டும் கொண்டு தப்ஸீரை தொகுத்துள்ளனர்.

இதன் பின்னனியில் தொகுக்கப்பட்டதுதான் அல் - மிஸ்பாஹு ல் முனீர் பீ தஹ்தீபி தப்ஸீர் இப்னி கஸீர்.

இது ஓர் அழகான தொகுப்பாகும் என்றாலும் சில இடங்களில் மனிதன் என்ற அடிப்படையிலான சில தவறுகள் நிகழ்துள்ளன.

இந்தத் தப்ஸீர் கிரந்தம் தற்போது தமிழ் உட்பட பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

எதிர்பார்ப்பு

இவ்வாறான தப்ஸீர் கிரந்தங்கள் அனைத்திலும் கூறப்பட்டுள்ள பலஹீனமான ஆதாரமற்ற செய்திகளும் மற்றும் இஸ்ராயீலிய்யாத் தான செய்திகளும் சரியான முறையில் தரம்பிரித்து இனங்கானப்பட வேண்டும்.

இம்முயற்சியில் சமகாலத்தில் ஹதீஸ் துறையில் அறிவுள்ள பல அறிஞர்கள் இன்றுவரை ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடரிலே அன்மைக்காலத்தில வெளிவந்த கலாநிதி ஹிக்மத் யாசினுக்குரிய அத்தப்ஸீருஸ் ஸஹீஹ் என்ற கிரந்தம் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவைகளை வாசிக்கின்ற இவைகளிலிருந்து அறிவைப்பெற விரும்புகின்ற மௌலவிமார்கள் இக்கிரந்தங்களில் கூறப்படுகின்ற செய்திகள் அனைத்தையும் கண்மூடித்தனமாக நம்பாமல் முடியுமானவரை உண்மையான செய்திகள் என்ன என்பதை தெரிந்து கொண்ட பின்னரே மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

தவறும் பட்சத்தில் தானும் வழி கெட்டு தம்மை நம்பி உள்ள சமூகமும் வழிகெட்டுப் போகின்ற பொறுப்பை எடுக்க வேண்டி ஏற்படும்
-அல்லாஹ் காப்பாற்றவானாக-

தொடரும் .....